Registered as a News Paper in Ceylon

P. M. G. No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

விரோதி ஞு (1889) ஆவணி மீ 28உ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளி வருவது

தனிப்பிரதி: சதம் 10.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - கூஎ] யாழ்ப்பாணம்:- மன்மத ஞு கார்த்திகை மீ கசூ உ வெள்ளிக்கிழமை (2 DEC. 1955) [இல-கூரு]

# நல்லமனிதன் யார்? மற்றவர் யார்?

## கவிஞர் எந்நாட்டவராயினும் கூறும்இலக்கணம் ஒன்றே

மதுரை திரு. பட்டாபி நாராயணன் B. Sc

(முற்றொடர்—2)

சாப்பிட்ட பின் வாயிவில் எறிந்த இலையில், தின்பதற்கேதாவது இருந்தால் அதைப் புரட்டிப் பார்த்தவனுக்கு ஓரளவு சந்தோஷமேற்படுகிறது. இருக்க வொரு குடிசையும், குடிக்கக் கூழும், உடுக்கக் கந்தையும் தடையின்றிக் கிடைப்பின் அதுவே இன்பமென நினைக்கிறான் ஒரு எளியவன். செலவிற்குத் தகுந்த வருவாய் கிடைத்தால் அதுவே இன்பமென்கிறது நடுத்தர வகுப்பைச் சார்ந்த ஒருவனுடைய உள்ளம். இதுபோன்றே நிறைந்த செல்வத்தில் காணலாம். இன்பமென்கிறது பணம் பெருகுவதினால் ஏற்படும் துன்பத்தை உணர்ந்தறியாத ஒரு மனம் — உள்ளமொன்றிய இல் வாழ்விலே மக்கள் பேசும் மழலையில், மதுவில், காம நுகர்ச்சியில், தெய்வ வழிபாட்டில் —மற்றும் இவைபோன்ற பலவற்றில் காணலாம் இன்பத்தை. ஆனால் இவற்றிலெல்லாம் புதைந்து கிடந்த இன்பத்தை நுகர்வதற்குள் எவ்வளவு துன்பக் கடல்களைத் தாண்டவேண்டியிருக்கிறது! ஆயினும் இன்பங் காணும் முயற்சியில் ஈடுபடாதவன் உண்டோ?

இதோ ஒரு நல்ல மனிதன்! மேனாட்டுக் கவியொருவனால் உருவாக்கப்பட்ட கற்பனை மனிதன் இவன். "ஒரு இன்ப வாழ்க்கை" என்ற தன்னுடைய கவிதையில் இன்பத்தின் எல்லையைப் பெரும்பாலும் கண்ட ஒரு மனிதனை உருவாக்குகிறான். அவன் தன கவி நோக்கால் இப் புதிய சிருஷ்டியைப் பார்க்கிறான் —அவன் வாழ்வை ஆராய்கிறான். தன் உள்ளமென்ற கண்ணாடியால் அந்த நல்ல மனிதனுடைய இன்ப வாழ்க்கையின் இரகசியங்களை நமக்குப் பிரதிபலிக்கச்செய்து காட்டுகிறான். இக் கவிதையைப் படிக்கப் படிக்கப் நம நாட்டுக் கவிஞர்களில பலர் அந்த மேனாட்டுக் கவியின உள்ளத்துடன் ஒன்றிப் போயிருப்பதைக் காண்கிறோம். பல இடங்களில் அவனது கற்பனையிலும் நம் நாட்டுக் கவிஞர்களின் மனப் போக்கிலும் ஒற்றுமை காண்கிறோம்.

மேனாட்டுக் கவிஞன் கூறுகிறான்:—

ஒருவன் இன்பத்திலேயே பிறக்கிறான். இன்பத்திலேயே திளைக்கிறான். வளர்கிறான். அந்த இன்பத்தாலேயே வாழ்நாள் முழுமையும் போதிகக்கவும் படுகிறான். அந்த இன்பமே அவனது உள்ளம் கற்ற கல்விக்கு — அவன் வாழ்விலடைந்த அனுபவத்திற்கு ஒப்பற்ற குருவாக விளங்குகிறது. இன்பத்தின் அரவணைப்பில் — அதன் தாலாட்டில் சுகங் கண்ட அந்த மனிதன் யார்?

இக் கேள்விக்கு விடை காண நம் உள்ளங்கள் விழைகின்றன. ஆம் அந்த மனிதன் நம் போன்றதொரு சாதாரண மனிதன் அல்ல அவன் ஒரு இலட்சிய புருஷன்.

தன் நம்பிக்கை என்பது அவனது இன்ப வாழ்வின் பற்றுக்கோல். பிறருடைய எண்ணங்களுக்கும் ஆசைகளுக்கும் அடிமை ஊழியம் புரியாதவன். தன்னுடைய உள்ளம் புகன்றதை உயர்ந்த கவசமாக அணிந்தவன் அவன். சத்தியத்தையே தன் ஒப்பற்ற திறமையென மதித்தவன். பொய் வஞ்சகம் இவற்றால் ஒரு புரளி செய்து அதனால் வயிறு வளர்ப்பவனல்ல அவன்.

உலக ஆசா பாசங்கள் அவனை அடிமைப்படுத்தவில்லை. உலகிலுள்ள எண்ணற்ற வெறிகளால் அவனைச் சிறைப்படுத்த முடியவில்லை. அவன் அவைகள் வசப்படவில்லை. அவனுடைய உள்ளம் எப்போதும்பரிசுத்தமாயிருக்கிறது.

தொடர்ச்சி 3-ம் பக்கம்

# இலங்கைக்கு வருவாரா?

## வினோபாஜீயின் ஆசி உரையும் பூமிதான யாத்திரையும்

இலங்கையில் இரண்டாவது சர்வோதய மகாநாட்டுக்கு ஆசார்ய வினோபாஜீ ஒரு செய்தி அனுப்பியிருந்தார். அச்செய்தி ஹிந்தியில் வந்திருந்தபடியால் மொழி பெயர்ப்புக்காக இந்தியாவுக்கு அனுப்பப்பட்டிருந்தது. மொழிபெயர்ப்பு இப்பொழுதுதான் அகில இலங்கைக் காரியாலயத்துக்குக் கிடைத்துள்ளது. ஆசிச் செய்தியின் மிக ஆழ்ந்த கருத்துக்களும் போதனைகளும் இலங்கை மக்களின் தற்போதைய தடுமாற்றங்களுக்கு ஒரு ஔடதமாகும், அச்செய்தியாவது:—

ஸ்ரீ வேலாயுதபிள்ளை

உங்களது இரண்டாவது சர்வோதய சம்மேளனம் நடக்கப்போகிற தென்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம். சர்வோதயத்தின் சித்தாந்தம் எல்லாத் தேசங்கட்கும் எல்லாக் காலத்திலும் சமமாகப் பொருந்துவதொன்று தனிமனிதன் தன் சேவை முழுவதையும் சமுதாயத்திற்குச் சமர்ப்பணம் செய்வானாக! தனி மனிதனது மலர்ச்சிக்கு சமுதாயம் பூரண வாய்ப்பளிக்குமாக. சமுதாயத்தில் ஒருவரும் துன்பப்படாமலிருக்கவேண்டுமென்று ஒவ்வொருவரும் சிந்திப்பார்களாக. பிறரது சுகத்தில் சுகமும் பிறரது துயரத்தில் துயரமும் கொள்ளுதல் சர்வோதய வழிமுறையாகும்,

— வினோபா

வினோபாஜி 1956-ம் ஆண்டு நடுப்பகுதி வரையில் தமிழ் நாட்டுக்குப் பூமிதான யாத்திரைக்காக வருகின்றார்கள். அவர்களை இலங்கைக்கு அழைக்கலாமா? எனத் தமிழ் நாட்டுப் பூமிதான இயக்கத்தை ஆக்கிய திரு. எஸ். ஜெகந்நாதன் அவர்களை அகில இலங்கைக் காந்திய சேவா சங்கக் காரியதரிசி எழுதி விசாரித்த பொழுது திரு. ஜெகந்நாதன் அவர்கள் எழுதிய பதிலில் குறிப்பிட்டிருப்பதாவது:

"பூஜ்ய வினோபாஜி அவர்கள் தமிழ்நாட்டிற்கு சித்திரை (ஏப்ரல்) கடைசியில வருவார்கள் என்று தெரிகிறது. சர்வோதய சம்மேளனம் ஆந்திராவில் திருப்பதியிலோ அல்லது தமிழ்நாட்டில்காஞ்சீபுரத்திலோ நடைபெறலாம். மார்கழி (டிசம்பர்) மாதம் 2-ம் வாரத்திற்குள் சம்மேளனம் நடக்கும் இடம், திகதி ஆகிய விபரங்கள் முடிவு செய்யப்படும் இலங்கைக்கு வினோபாஜீ வருவாரென்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. அவர் கடவுள்விட்டவழி செல்பவர். இலங்கைக்கு அவர் வருவது கடவுள் விருப்பமானால் நிச்சயம் வருவார்.

ஆகையால் பூஜ்ய வினோபாஜீயை இலங்கை மக்களின் தரிசனத்துக்காக முயற்சிகள் நடைபெறுவதாகவும இலங்கை

தொடர்ச்சி 6-ம் பக்கம

அரசியல் அலை

# முன்னாள் முதலமைச்சரும் மன்னார்ப் பிரதிநிதியும்

# மொழிப் பிணக்குக்கு வழிகாணும் விந்தை!

மன்னார்ப் பிரதிநிதி திரு. க. சிற்றம்பலம் சிங்களத்திற் சொற்பொழிவாற்றினாராம்! பழைய பிரதமர் திரு. சேனநாயக இதைக்கேட்டு பரமானந்தம் கொண்டாராம்!! அவ்வளவில் அமையாது தமிழ் இனத்துக்கு ஒரு புத்தி மொழியும் புகட்டினாராம!!

தமிழினம் சிற்றம்பலங்களாக மாறிவிட்டால் ஈழத்தில் அரசியற் பிணக்குக் கிடமெங்கே என்ற பழைய பிரதமருக்கு உபசார உரையாக மன்னார்ப் பிரதிநிதி சிங்கள மக்கள் எல்லாரும சேனநாயகபோல இருப் பார்களேயானல் என்று சொல்லியிருந்தால் நன்றாயிருக்கும்.


தமிழர்கள் சிற்றம்பலங்களாகிப் பின் சிங்களவர்களாகிவிட்டால் திரு. சேனநாயக பழையபடி பிரதமராவதற்கு வழியாய்விடும் என்பதை ஒருவரும் மறக்கமாட்டார்கள். ஆனாலோ திரு. சேனநாயகாவின் புத்தி மாறாட்டம் எப்போ [illegible] தமிழினத்தின் சித்தம் மாறமாட்டாது என்ற

உண்மையை அறிவதற்குத் திரு சிற்றம்பலம் தமிழர் சால்பை எடுத்துச் சிங்கள மொழியிற்சொல்லி விளக்கப்படுத்துதல்நன்று.

அகமைச்சர் திரு. நடேசனும் அறிந்துவிட்டார்!

இராமநாத வள்ளல் நினைவுநாளிலே தமிழுக்கு வந்த

தொடர்ச்சி 5-ம் பக்கம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKASA PRESS

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

யாழ். மன்மத ௵ கார்த்திகை ௴ ௧௬ உ வெள்ளிக்கிழமை

## இன்னமும் இடமுண்டு

ஐக்கிய தேசியக் கட்சியின் காரியக்குழு பொறுப்பு வாய்ந்த வேளையிற் கூடியது விரும்பத் தக்கதே. இக்கட்சியினர் கொணர்ந்த முரண்பாடான யோசனைகள் நாட்டிற் பெரும் பரபரப்பை உண்டாக்கி விட்டன. எனினும் இந்த யோசனைகளை நன்கு ஆராய்ந்து அமைதியான சூழ்நிலையில் அநுபவம் மிக்க அரசியல் வாதிகள் ஒரு ஒற்றுமையான முடிபுக்கு வருவதற்கு ஒரு உபசபை நியமிக்கப்பெற்றிருப்பது வரவேற்கப்பட வேண்டியதொன்று. ஆதிக்கக்கட்சி, அரசியல் ஆபத்தான இந்த நேரத்திலே, நாட்டின் நன்மையையன்றி வேறொன்றையுங் கருதாது பரோபகார சிந்தையுடன் கடமையாற்றுதல் அத்தியாவசியம்.

பிரேரணைகளை ஆராய்வதற்கு அமைக்கப்பெற்ற பிரத்தியேகக் குழுவில் அமைச்சர்கள் நடேசன் ஜயவர்த்தனவும் முன்னாள் அமைச்சர்கள் சேனநாயக அமரசூரியாவும் மேல்மன்ற அங்கத்தவர்கள் அசீசும் ஜயசுந்தராவும் நாட்டின் வருங்காலப் போக்கை நிர்ணயிக்கும் பெரும் பொறுப்பை ஏற்றிருக்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அநுபவம் வாய்ந்த அமைச்சர்கள் நற்புத்தி கூறி நாட்டைக் காப்பாற்றுவார்கள் என்று நம்புகிறோம்.

x x x

## புயற்காற் றிழைத்த பொல்லாங்கு

'பட்ட காலே படும்' என்ற பழமொழி போல மூவாண்டுகளுக்கு முன் சூறாவளியாற் றுன்புற்ற கமக்காரர்களைப் புதன் கிழமை பகலும் இரவும் அடித்த புயல் மறுபடியும் வருத்திவிட்டது.

பயிரிட்டு அப் பயனால் வாழ்க்கை நடத்திவருபவர்களுக்குக் காலத்துக்குக் காலம் இவ்வித இன்னல் விளைவதனாற் கமத்தொழில் விருத்தியாகாது தடைப்படுவதுமன்றி நாட்டின் பொருளாதார நிலையும் சீர்குலைந்து விடுகின்றது. இயற்கையின் விபரீதங்களுக்கு எதிராக எச்சரிக்கையாயிருப்பது இயலாத காரியமெனினும் கமத்தொழிலைக் காப்பாற்றுவதற்காக அரசினர் ஒரு நட்ட ஈட்டுநிதி ஒதுக்கி வைத்து வேண்டிய வேளைகளில் அல்லற்படுவோருக்குதவுதல் நன்று.

இம்முறை புயற் காற்று விளைவித்த பெருநட்டத்தை எடுத்துச் சொல்லுதல் இயலாததாகின்றது. முக்கியமாக வாழைத் தோட்டங்களில் வாழ்க்கை நம்பிக்கையை வைத்தவர்கள் கண்ணீர் சொரிந்த வண்ணம் கவலையுற்று வழியறியாது மனம் வாடுகின்றனர். அழகான வாழைக் கூட்டங்கள் அடியோடு வீழ்ந்துவிட்டன. பூவும் பிஞ்சும் காயும் கனியுமாயுள்ளன வெல்லாம் தலை சாய்ந்து தரையிற் படிந்திருக்கின்ற கவலைக்கிடமான காட்சியை அரசினரின் அதிபதிகளும் அதிகாரிகளும் காண்பார்கள் என்பது உண்மை. நியாயமான முறையிலே நட்டஈடு கொடுபடல் வேண்டுமென்று எடுத்துக் காட்டுவார்கள் என்பதும் உண்மை. ஆனால் அங்கு மத்திய அரசாங்கம் தானாக ஒன்றைக் கணித்துச் சேலை கேட்டவர்களுக்குச் சில நூல்கொடுத்தவாறு சாட்டுக்குச் சமாளித்துவிடுவார்கள் என்பதும் உண்மை.

# திருவள்ளுவர் திருநாள்

## மாசி உத்திரம் என்பதற்கு மற்றுமொரு சான்று

( ஸ்ரீ சிவசூரியநாராயணபிள்ளை, பஞ்சாங்ககணிதர், தென்னிந்தியா )

**திருவள்ளுவர் திருநாள் மாசி உத்திரம் எனக் காட்டினார் நல்லூர் நாவலப்பெரியார்.**

**அந்நூற்றாண்டு கடந்தும் இந்நூற்றாண்டில் அதனையே தழுவி அழைப்பிதழ் விடுத்தார் அறிவானொன்ற அறிஞர்.**

அவர் திருநெல்வேலி (தென்னிந்திய) சைவ வேளான் மரபினராம் கா. சுப்பிரமணிய பிள்ளை என்னும்பெரியார். மறைமலையடிகளோடு காலத்தாலொத்தவர். நாம் அறிந்தளவில் எளிலும் குணம், கல்வி, கேள்வி அறிவு ஆராய்ச்சி பட்டம் பதவி பலவாற்றாலும்மிக்கார், பெருமக்களாற் பாராட்டப் பெறுபவர். திருவள்ளுவநாயனார் குருபூசை நாள் மாசி உத்திரமே என்பது நன்கு விளங்கும் அழைப்பிதழ் ஒன்று அன்னார் வெளியிட்டிருந்தார். அது 21-9-1931 சிவநேசன் பத்திரிகையில் வெளியாகியிருந்தது. தமிழ் மறைக்கழகத்தின் 15-5-55 திருவள்ளுவர் திருநாள் மலர் பக்கம் 55ல் மேலே குறிப்பிட்ட பிள்ளை அவர்களின் சிறப்புக்கள் விளக்கப்பட்டிருக்கின்றன. ஏனையோரோடு தமிழ் மறைக் கழகத்தாராலும் புகழப்படுகின்ற அப் பெரியார் வெளியிட்ட அழைப்பிதழைத் தமிழ்மறைக் கழகத்தார் கண்டால், தங்கள் புகழுரைக் கேற்ப அப் பெரியாரது கருத்தின்படி ஒருபோது ஒழுகவுங்கூடுமே என்ற எண்ணத்தால் அதனை இங்கே தருகின்றேன்.

### அந்த அழைப்பிதழ்

நிகழும் 1918-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 27-ந் தேதி புதன்கிழமை (பிங்கள ௵ மாசி ௴ 16 உ உத்திரம்) தமிழ் வழங்கும் நிலமெங்கும் நல்லறிவுச் சுடர் கொளுத்தியருளிய தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார் குருபூசைத்தினமாகையால் அன்று மாலை 6 மணிக்கு அம்பட்டன் வராவதிக்கடுத்த பிள்ளையார் தோட்டத்தில் பல தமிழபிமானிகள் ஒருங்கு கூடிப் பற்பல மகோபந்நியாசஞ் செய்வார்கள். அன்பர்கள் யாவரும் வந்திருந்து கேட்டு ஆனந்திக்கும்படி விரும்புகின்றேன்.

இங்ஙனம்
கா. சுப்பிரமண்யம்
சைவசித்தாந்த சமாசக்
மயிலாப்பூர், காரியதரிசி,
17-2-1918.

இத்தகையதான மாசி உத்திரமாண்பினை 4-11-55 இந்துசாதன இதழில் தென்மயிலை திரு. செ. கோவிந்தசாமி அவர்கள் விளக்கி விடுத்த வேண்டுதலின் வழி சைவமுறைப்படி திருவள்ளுவ நாயனார் குருபூசையைச் செய்து வழிபாடாற்றல் நலமனைத்தினும் மேலாம் நலமே எனக.

## புயல் உண்டாக்கிய பெரும்நட்டம்

யாழ்ப்பாணத்தின் எல்லாப் பகுதிகளும் புதன் கிழமை வீசிய புயலால் தாக்கப்பட்டுள்ளன. கமக்காரருக்கு இலட்சக் கணக்கில் நட்டம் ஏற்பட்டிருக்கின்றது. நீர்வேலி கோப்பாய் உரும்பராய் ஆகிய இடங்களில் வாழைத் தோட்டங்களுக் குண்டான நட்டம் மிகமிகப் பெரிது. நீர்வேலி காந்தியசேவாசங்கப் பனங்கட்டிச்சாலை மிகவும் தாக்கப்பட்டுத் தரையாக்கப் பட்டுள்ளதாம். வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தின் ஒரு பகுதியில் மரம்விழுந்து பெரும்சேதம் உண்டாக்கியுள்ளது.

## மொழி பற்றிப் பொறுமை

இலங்கைக்குத் திரும்பிய முதல் மந்திரி சேர் ஜோன் கொத்தலாவல அரசாங்க மொழிபற்றியாவரையும் பொறுமையாயிருக்கும்படி கேட்டுக் கொண்டார். அனாவசியமாக இரத்த ஆறு பாயச் செய்த இந்திய பாகிஸ்தான் நிலைமை படிப்பிக்கும் பாடத்தைக் குறிப்பிட்டு அத்தகைய நிலைமை இங்கே ஏற்படத் தாம் இடங் கொடுக்க மாட்டாரென்று வற்புறுத்தினார்.

# அணிந்துரை அரங்கம்

### அநுபவமுள்ள குடிநீர் வகைகள்

ஆக்கியோன்
வைத்தியாச்சாரி
திரு ஏ. சி. இராசையா

அகில இலங்கைச் சித்த ஆயுள்வேத வைத்திய சங்க இரண்டாம் வெளியீடாகவுள்ள இப்புத்தகம் சித்த ஆயுள் வேதத்திற் பெரும் அநுபவமும் அறிவும் பெற்றிருக்கும் வைத்தியாச்சாரி திரு. ஏ. சி. இராசையா அவர்களாலே தொகுக்கப் பெற்றது. வைத்திய முறைகள் வைத்தியனுக்கே ஒரு பரம இரகசியமாக இருத்தல் நன்றன்று என்றெண்ணி மனிதகுலம் உடல் நலம் பேணி உய்வதற்கு உகந்த வழிகளைக் காட்டுவது கடமையென ஓர்ந்து இவ் வெளியீடு தொகுக்கப்பெற்றிருக்கிறதென்பது நன்கு புலப்படும். வீட்டு வைத்தியமென்று சாதாரணமாகக் கூறப்படும் வகையிலே பயன்படுத்தப்படவும் இன்னும் வைத்தியர்களாலே கையாளப் படக்கூடிய முறையிலும் இப் புத்தகம் வெளியிடப் பெற்றிருக்கின்றது. இத்தகைய சிறப்பு வாய்ந்த தொகுப்பு ஒரு வைத்திய கைநூலாக அமைகின்றது. அநுபவமே அறிவு; அவ்வழி அது சித்திக்கும் வித்தாகின்றதாகையால் இவ்வெளியீடு நல்லாதரவு பெறுமென்பதற்கையமின்று.

கிடைக்குமிடம்:
அ. இ. சி. ஆ. வைத்திய சங்கக் காரியாலயம்
259, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்
விலை ரூபா 1-50

= 0 =

### மொழிப் பயிற்சி 5-ம் புத்தகம் (6-ம் வகுப்பு)

ஆக்கியோன்
பண்டித வ. நடராசன்

மாணக்கர்களுக்குத் தகுந்த வகையிலே மொழிப் பயிற்சி அளிப்பதற்குத் தொகுப்பு நூல்கள் பல வேண்டப்படும் இக்காலத்திற் பண்டிதர் வ. நடராசன் அவர்கள் அநுபவவழியில் நின்று அறிவு ஆற்றலாற் பெரிது முயன்று இதனை வெளியிட்டிருப்பது வரவேற்கப்பட வேண்டியதே. ஒவ்வொரு தரத்துக்கும் இணைந்து வரக்கூடிய முறையில் இப்புத்தகம் வெளிவந்துள்ளது. ஆறும் வகுப்பு மாணக்கர்கள் மொழியைப் பயிலுதற்கு வேண்டிய வழிகள் யாவும்

தொடர்ச்சி 5-ம் பக்கம்

## திருக்கேதீச்சரத்தில் சோமவாரம்

இரண்டாவது சோமவார வழிபாட்டு நிகழ்ச்சிகள் திருக்கேதீச்சரத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றன.

சாவகச்சேரி மகளிர் கல்லூரி மாணவரும் திருக்கேதீச்சரம் சைவப் பாடசாலை மாணவரும் பக்திப்பாடல்களைப் பாடினார்கள். ஆசிரியர் ஸ்ரீ. வி. சுப்பையா அவர்கள் தலைமையில் கூட்டம் ஒன்று நடந்தது. சைவப்புலவர் ஸ்ரீ த. குமாரசுவாமிப்பிள்ளை அவர்கள் சுந்தரமூர்த்தி சுவாமிகள் சரித்திரம் திருக்கேதீச்சர மகிமை ஆகியவை பற்றிச் சொற்பொழிவாற்றினர்.

சாவகச்சேரிப் பிரதிநிதி ஸ்ரீ வி. குமாரசுவாமி, மன்னார்ப் பிரதிநிதி ஸ்ரீ சி. சிற்றம்பலம் ஆகியோரும் நிகழ்ச்சிகளிற் பங்கு பற்றி ஊக்கமளித்தனர்.

மூன்றாவது சோமவார நிகழ்ச்சிகள் வலிகாமம் வடக்கு அடியார்களின் பொறுப்பில் நடைபெறும். சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்களும் சமூகமாயிருப்பரென்று கருதப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லமனிதன் யார்? மற்றவர் யார்?

1-ம் பக்கத்தொடர்ச்சி

நம்மை உலகத்தோடு பிணைப்பன எவை? ஆசை, மதிப்பு, பொதுக்கீர்த்தி, தனிப்பட்ட புகழ்ச்சி (Public Fame and Private Flattery) என்ற பலவித மான தளைகள் தாமென் பதில் ஐயமு முண்டோ? அவற்றையெல்லாம் அவன் அறுத்தெறிந்தவன். இறப்பை, எந்த வேளையிலும் மலர்ச்சியுடன் வரவேற்ப வன் அவன்.

அவன் ஒருவரையுங் கண்டு பொறாமைப்பட்ட தில்லை. ஆகவே தன்னைப் பார்த்து ஒருவரும் பொறாமைப்பட்டதாக அவன் எண்ணியதுமில்லை. அவனுடைய வாழ்க்கை வதந்திகளுக்கு அப்பாற்பட்டது.

உலகம், ஆடம்பரத்திற்கு அடிமையாகும் காலமிது. எங்கு பார்த்தாலும் கண்ணைப் பறிக்கும் பகட்டு— வெறும் பகட்டுத்தான். ஆனால் நம் பணத்தைப் பறிக்காமல் விடுகிறதா? இவ்வளவு வரட்டு இடம்பம் வாய்ந்த நம் பகட்டு உலகம் அவனது இருப்பிடமல்ல. தன்னுடைய மனச்சாட்சியையே உலகமாகக் கொண்டவன் அவன். தன்னைப் புகழ்வோருக்குப் பரிசில் வழங்குவதற்கோ - அல்லது - தன்னை இகழ்பவனுக்கு இன்னல் விளைவிப்பதற்கோ சக்தியற்ற நிலையிலுள்ளான் அவன்

அவன் அநுதினமும் எந்நேரத்திலும், எந்நிலையிலும் பூசித்து வரும் கடவுளே அவனுடைய மனக் கோயிலை அலங்கரிக்கிறார். அவனது இறைவழிபாடே தனிப்பட்டதாயிருக்கிறது. அவன் கடவுளின் பெருமைகளைப் புகழ்கிறான் — பாடுகிறான் — ஆனந்தக் கூத்தாடுகிறான். ஆனால் தன் கடவுளுக்கென்று பிரத்தியேகச் செலவு ஒன்றும் அவன் செய்வதில்லை. கீழ்வானில் வெள்ளொளி பரப்புகிறான் ஆதவன். பகற்பொழுது துவங்குகிறது. அவன் அதைத் துன்பமேயில்லாத தினமென்று வரவேற்கிறான். அவன் கையில் வேதபுத்தகம் எப்போதும் துலங்குகிறது. அல்லது மேம்பட்ட அறநெறியாளர்கள் அவனைச் சூழ்ந்திருக்கின்றனர்.

இவ்வளவு சிறப்பு வாய்ந்தவன் அந்த நல்ல மனிதன். புகழ்ச்சியின் சிகரத்தை அடையத்தான் வேண்டுமென்ற நம்பிக்கையோ அல்லது இகழ்ச்சியால் மீளமுடியாத பாதாளத்தை அடைந்துவிடுவோமோ வென்ற பயமோ அவனை அணுகக்கூட முடியவில்லை. அவன் ஒருபெரிய நிலப்பரப்பின் தலைவனாக வில்லை. தனக்குத்தானே தலைவனாகிறான். தன் உள்ளமாகிய பரந்த உலகின் ஒப்பற்ற தலைவனாகிறான். சக்கரவர்த்திக்கும் கிடைக்காத இன்பத்தை அவன் அடைகிறான். ஒன்றுமே தனக்கென்று இல்லாவிட்டாலும் எல்லாமே உடையவனாகிறான்.

இவனன்றோ இன்பமனிதன்! நல்ல மனிதன்! .... .... ஏன்? ....மனிதன்!

(சர். ஹென்றி வாட்டன் எழுதியதைத் தழுவியது.)

இதைப்படிக்கும்போதே என் சிந்தனை அமுதத் தமிழ்க் கவிதைக் கடலினுள் மூழ்க விழைந்தது. கடலினுட்புகுமுன், அதன் அலைகளே எண்ணற்ற கவிதைகளை அள்ளிக் கொடுத்தது போலத் தோன்றியது. கரைமீதுள்ள கிளிஞ்சல்களோடு கூடி, நுரைத்துச் சுழன்றபோது அந்த அலை நீர் ஏதோவொரு பண்ணிசைப்பது போன்றிருந்தது. அந்தப் பின்னணியில் இனிமையான கவிதையொன்று என் காதில் ஒலித்தது.

"யாருடைய பாட்டு?' கூர்ந்து கவனித்தேன். காற்றில் கலந்து வந்த அக்கவிதை என் உள்ளச் செவியோடு உறவு கொண்டாடியது. ஆம் உங்களுக்கும் கூறித்தான் ஆகவேண்டும்! இல்லாவிட்டால் அது ஒரு சிதம்பர இரகசியமாகவல்லவோ இருந்துவிடும்! கேளுங்கள்! கூர்ந்து கேளுங்கள். அலைகொண்டு வந்த செய்தி என்னை அதிர்ச்சியடையச்செய்தது. (நீங்கள் மட்டும் சிறிதும் பயப்படாமல் அலையின் கூற்றைக் கேளுங்கள்.)

"பேய்! பே.......ய்!! பேய்!! என்றது அந்த அகங்காரம் பிடித்த அலை.

"யார் பேய்?" தைரியமாகவே கேட்டேன் நான்.

"உன் உள்ளத்தில் உலவும் அந்த நல்ல மனிதனின் பரமவிரோதி இவன்" என்று அந்தக் கவிதை யைப்பண்ணுடன் பாடியது அந்த அலை.

இப்பேயை உருவாக்கியது யாரென்றேன் நான்.

"அவர்தான் அருணசலக் கவிராயர்!" என்றது அந்த அலை. மேலுந் தொடர்ந்து அது இசைத்தது. "தன்னைப் புகழ்வாருக்கு சாட்சி சொல்லி [illegible] பொன்னை மிகத் தேடிப்

# கண்டியில் திவ்விய சீவன சங்கம்

## எழில் நிறைந்த சச்சிதானந்த தபோவனம்

## அவற்றின் அமைப்பும் நோக்கங்களும்

ஐப்பசித் திங்கள் 12ம் திகதி (29-10-55) சனிக்கிழமை கண்டி தன்னக்கும்பர பிள்ளையார்கோயில் மடாலயத்தில் இமாலய ரிஷிகேச திவ்விய சீவன சங்க ஸ்தாபகரும் தலைவருமான மகா மண்டலேஸ்வர ஸ்ரீலஸ்ரீ சிவானந்த சரஸ்வதி சுவாமிகள் அவர்களுடைய பரிபூரண ஆசியோடு, யோகிராஜ் ஸ்ரீமத் சுவாமி சச்சிதானந்தா அவர்களின் தலைமையில் கண்டி திவ்விய சீவன சங்க ஆரம்பவிழா இனிதுநடைபெற்றது.

சச்சிதானந்த தபோவனம் என்னும் இவ்விடத்தில் யோகிராஜ் ஸ்ரீமத் சுவாமி சச்சிதானந்தா அவர்கள் தங்கியிருந்து நல்லுபதேசந் தரும் யோகாசனப் பயிற்சிகளும் எல்லாரும் பயன்படும் பொருட்டு நடாத்தச் சம்மதித்துள்ளது கண்டி மக்களின் புண்ணிய பலனேயாகும்.

மேற்படி மடாலயம் கடந்த சில ஆண்டுகளாக சிறப்பாய் உபயோகிக்கப்படாமையால் பழுதடைந்த நிலைமையிலும் வசிப்பதற்குச் சுகாதார வசதிகள் அற்ற நிலைமையிலும் இருந்து வந்தது. கந்தன் தோட்டத்துக்குச் சொந்தக்காரரான திரு. எம். எஸ். துரைசாமி பி. ஏ., ஜே. பி. அவர்கள் தனிமையாகவே இத்திருப்பணியை மேற்கொண்டார்கள். இவர் மூவாயிரம் ரூபாய்க்கு மேல் செலவு செய்து சுமார் 10 நாட்களுக்குள் கட்டிடத்தைத் திருத்தி சுகாதாரவசதிகளை அமைத்துக் கொடுத்தனர்.

சச்சிதானந்த தபோவனம் மகாவலிக் கங்கைக் கரையில் வெகு அழகாகவும் அமைதி நிறைந்த சூழலிலும் இயற்கை எழில் சூழ்ந்து விளங்குகின்றது. இது சகல வசதிகளும் அமைந்த ஆச்சிரமம். யோகாசனங்கள் பயிலுதற்கு மிகப் பொருத்தமான இடம். பக்தர்களைப் பரவசப்படுத்தும் வனமே இத் தபோவனம்.

மத்திய மாகாண உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. தட்சணாமூர்த்தி அவர்கள் சச்சிதானந்த தபோவனத்தில் அமைந்துள்ள நூல் நிலையத்தைத் திறந்து வைத்து நூல் நிலையத்தினால் அடையக்கூடிய பலவித பலன்களையும் தெய்வீக வாழ்க்கைக்குதவக் கூடிய நூல்கள் யோகீஸ்வரர் சுவாமி சிவானந்த அடிகளின் அருளால் கண்டி மாநகரத்தில் பெருகவேண்டிப் பிரார்த்தனையுடன் எடுத்துரைத்தார்.

இதன் பின்னர் சுவாமி அவர்கள் யோகாசனப் பயிற்சிகளின் சிறப்புக்களைத் தெளிவாய் எடுத்துக் கூறி யோகாசனப் பயிற்சி வகுப்பைத் தொடங்கிவைத்தார்.

சேர் கந்தையா வைத்தியநாதன் இவ்வித சபையொன்றின் அவசிய தேவையையும் பக்தியும் நல்லொழுக்கமும் ஆசாரங்களும் வாழ்க்கையில் எவ்வளவு பிரதானமானவையென்பதையும் இன்னும் பல பொருள்கள் நிறைந்த நல்லுரைகள் பகர்ந்தார். சுவாமி சிவானந்த சச்சிதானந்த மாதாஜி அவர்கள் பக்திப் பரவசமான நல்லுபதேசங்களை சபையோர் மனதில் நன்கு பதியுமாறு எடுத்துரைத்தார்கள்.

திருவாளர்கள் க. குமரவேல், க. இராமச்சந்திரன், கே. பி. கரன், நா. முத்தையா அவர்களும் சங்கத்தின் அத்தியாவசியமான தொண்டுகளையும் முன்னேற்றத்துக்காகிய வழிவகைகளையும் நன்கு எடுத்து விளக்கினர்.

### சங்க நோக்கங்கள்

ஸ்ரீ சற்குரு சிவானந்த மகரிஷிகளின் உபதேசங்களைப் பின்பற்றி, ஆன்ம நெறியில் இகம், பரம், இரண்டிலும் நல்வாழ்வு வாழ ஆண் பெண் அனைவருக்கும் சாதி, மத, நாடு, நிற,

தொடர்ச்சி 4ம் பக்கம்

புதைப்பானும் — ஒன்னலர் தம்
கண் புத்தி கேட்பானும்
நாண மில்லாதானும்
பெண் புத்தி கேட்பானும
பேய்
(தனிப் பாடல்

நாம் முன்னால் கண்ட அந்த நல்ல மனிதன் எங்கே. இதோ இங்கு நிற்கும் இந்தப்பேய்எங்கே? மலையின் உச்சிக்கும், கடலின் ஆழத்திற்குமுள்ள அவ்வளவு வேற்றுமையன்றோ இருக்கிறது இவ்விருவர்களுக்கும். ஆம்! வேற்றுமைதான் அந்த வேற்றுமையிலும்எவ்வளவு ஒற்றுமை!

[illegible]

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

முன்னிதழ்த் தொடர்ச்சி

## மகா கவி காளிதாசரின்

# குமார சம்பவம்

தமிழாக்கம்

பரமேஸ்வரக்கழகம் — ச. இராமச்சந்திரன்

மூன்றென உலகு மூளைத்திடா நாளில் மூலமா மொருவனாகிய நீ
தோன்றியே தோற்ற நிலைத்தலோ டொடுக்கந் தொழிற் படுத்துதற்குரி [த்தாய
மூன்றமூர்த்திகளா யமைந்தறு மகிலமாக்கியே அளித்தழித்தருளும்
என்றசீரைய எமையெலாம் புரக்கு மிறைவநின் னிணையடி போற்றி.! (66)

உலகது படைக்க உளங்கொளுமாற்ற லொன்றெனு நின்னுரு விரண் [டாய்
நிலவநீ செய்ய வவ்விரு கூறும் நிலைத்தன ஆணொடு பெண்ணாய்
அலகுசால் சிறப்பி னவ்விரண்டுயிரு மவனியிற் பெற்றவ ரெனவே
பலமுறை மறைகள் பன்னிடப் பிறக்கப் பண்ணுநின் பதமலர் போற்றி. (67)

காலமென் பதனை அளந்தறிந்திடநீ கங்குலும் பகலுநன் கமைத்து
மேலுநீ யுறங்க லொடுவிழிப்புறுதல் மேவிடு விதத்தினா லிங்ஙன்
சாலவேயுற்ற சராசர மெல்லாம் தாமழி வாக்கமும் முறையே
எலாமுன் பொருந்தி இயங்கிடு மிதனை எந்தவிங்கியாவரு முணர்வார். (68)

காரணமானா யுலகினுக் கெல்லா யெனினுநீ காரணமற்றாய்
பூரணமான முதலவைக்காணாய் நீமுதல் பொருந்துமா றில்லை
எரண முணர்ந்தா யிறுதியா யெவைக்கு மிறுதியற்றவனுநீ இயங்கிச்
சாரணி யோங்கு சராசரந் தமக்குத் தலைவனே தலைவனற் றவனே. (69)

உன்னையேநீயு முன்றனினாலே யுணர்தலும் புரிகுவா யுணர்ந்து
நின்னையேநீயு நின்றனினாலே நிலைபெறப் படைப்பைபின் னருநின்
தன்னையே உனக்குட் டானடக்கிடுவை சாற்றுமிச் சக்திகளெல்லாம்
அன்னைபோ லெம்மை ஆதரித்திடுவோய் அறிவினிற் [illegible] (70)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேயர்கள் நெஞ்சம்

ஆசிரிய அன்ப,

### மொழிப் பிணக்கு உண்டாக்கிய புது நிலைமை

ஐக்கிய தேசியக் கட்சி இனறு இரு பிரேரணைகளை ஆராய்ந்து தீர்மானிக்க வேண்டியதாயிருக்கின்றது. ஒன்று சிங்களத்தையே தனி அரசாங்க மொழியாக்கவேண்டுமென்பது. மற்றது தமிழ்த் தனி அரசு சிங்களத் தனி அரசு என நாட்டை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்பது அல்லது சமஷ்டி ஆட்சி நிறுவவேண்டுமென அரசியல் திட்டத்தை மாற்றவேண்டுமென்பது. இவை இரண்டும் வருங்காலத்தில் நினைத்தற்கரிய பெரும் விளைவுகளை உண்டாக்கக் கூடியவையாகையால் இவைபற்றி ஆராய ஒரு ஆராய்ச்சிச் சபையை நியமித்தல் வேண்டும். அச்சபையின் முடிவு வரும்வரையில் இப்பொழுதுள்ள பிரேரணைகளை இப்பொழுது ஆராயாது பின்போடுதல் நன்று. விளைவுகள் மிகப் பாரதூரமானவையாகையால் இவை அமைதியாய் நடுநின்று நன்காராயப்படுதல் வேண்டும்.

சு. சிவசுப்பிரமணியம்

கொழும்பு
24—11—55.

## புறமதவிழாக் கொண்டாட்டம் பொருத்தமாகுமா?

தென்மயிலை
திரு. செ. கோவிந்தசாமி

சைவர்களாகிய நாங்கள் புத்த ஜயந்தி கொண்டாடுவது ஒரு அவசியமா? புத்த சமயம் சைவசமயத்தின் ஒரு படிநிலையாகும். அஃதாவது அது அறுவகைப் புறச்சமயங்களுள் ஒன்று. எங்கள் சைவ பரிமாசாரியர்களான திருஞானசம்பந்த சுவாமிகள், மாணிக்கவாசக சுவாமிகள் முதலானோரும், புத்தர்களின் ஊழல்களைக் கண்டித்துள்ளார்கள். சைவசித்தாந்தம் கூறுவது எல்லாச் சமயத்தவருக்கும் பதிப்பொருளாகிய கடவுள் ஒன்று என்றுதான். ஆனால் அவ்வச் சமயங்கள் கூறும் மகான்கள் கருத்து வேறு. இதைச் சமரசப்படுத்த முடியாது என்று மெய்ப்பொருளாகிய உண்மையை அறிகின்றோமோ அன்றுதான் உண்மைச் சமரசம் உண்டாகும். அதுவரையும் எல்லாச் சமயங்களும் ஒன்று என்று மயங்குவது பேதமையாகும்.

புத்தஜயந்தி கொண்டாட வேண்டியவர்கள் புத்தர்களே. புத்த ஜயந்தியை விரும்புகிறார்கள் தமிழர்கள் என்று ஒரு மொழி கேட்கும் அரசியல்வாதிகள் எடுத்துக் காட்டவுங் கூடும். புத்த மதத்தை அரச மதமாக்குவதும் உடன்பாடுதான் என்ற முடிவுக்கு புத்த சந்நியாசிகள் அதி சீக்கிரத்தில் வரமாட்டார்களா? அதையும் தமிழர்கள் விரும்புவார்கள் என்று புத்தமதத் தலைவர் சொல்லமாட்டார்களா? புறமத விழாக்களைக் கொண்டாடுதல் ஒவ்வாது. அப்படிக் கொண்டாடினால் தமிழ்ப்பாஷைக்கே தீமையாய் முடியும். அப்படியாராவது கொண்டாட விரும்புகிறவர்கள் பாஷைப் பிரச்னையை முடித்துக் கொண்டு செய்வது உத்தமம்.

### நெசவுச்சாலைத் திறப்பு விழா

கார்த்திகை 9 உ வெள்ளிக்கிழமை (25-11-55) கரணவாய் வடகவில் வடமாகாண அரசாங்க அதிபர் ஸ்ரீ ம. ஸ்ரீகாந்தா அவர்களால் புதிதாய் அமைக்கப்பட்ட நெசவுச்சாலை ஒன்று திறந்து வைக்கப்பட்டது. அத்தருணம் பருத்தித்துறைப் பாராளுமன்றப் பிரதிநிதி ஸ்ரீ தா. இராமலிங்கம் முதலிய பல அறிஞர்கள் சொற்பொழிவுகள் ஆற்றினர்.

## நல்ல மனிதன் யார்! மற்றவர் யார்?

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அந்த நல்ல மனிதன் உயர்ந்த பண்புகளில் பெரும் பகுதியை இங்கு இழந்தவனை ஒருவனை உருவாக்குகிறார் அருணாசலக் கவிஞர். இந்த மனிதன் தன் மனிதத் தன்மையை இழக்கிறான். அவன் ஒரு கெட்ட மனிதன் என்பதோடா நிறுத்திக் கொள்கிறார்? அதுதானில்லை. அவனுக்கும் மிகவும் கேடுகெட்ட 'பேய்' என்றே கூறுகிறார் இக் கவி.

அவன் பேய்தானே? யாரும் மறுக்கமுடியுமோ?

இதுபோன்றே, இனித்த தனிப்பாடல்களில் நாம் காண்கின்ற வேறு சில உண்மைகள் வாட்டன் அவர்களின் கூற்றுடன் ஒன்றியிருப்பதைக் காண்கிறோம்.

நன்மனம் - பண்பட்ட மனம் - இன்பத்தால் திளைத்த மனம் - எது? என்று கூறுமிடத்து ஒரு கவிஞர் சுகம் - துக்கம், வறுமை - செல்வச் செழிப்பு; புகழ் - நிந்தை; வீடு - கானம், இவற்றையெல்லாம் சிறிதும் வேற்றுமையின்றி நோக்கும் தன்மையைக்கொண்ட மனமே - நன்மனம்! என்கிறார்.

மற்றொரு தனிப்பாடலில் ஒரு கவிஞர் இறைவனிடத்து வேண்டிக்கொள்கிறார். அவர் இறைவனை நோக்கி இறைஞ்சும் வரம் யாது?

"என்னின் எளியவர்க்
கென்னால் இயன்றதை
மன்னும் என் அக ஒளி
காட்டும் வழியினில்
உன்னி உழைக்கஉகந்தருள"

என்று வேண்டுகிறார்.

தன் அக ஒளி காட்டும் வழியைத்தான் பின்பற்றுதல் வேண்டுமென்றதொரு பிடிவாதம் அவரைப் பிடித்துக்கொண்டது.

இதுதான் ஒன்றுபட்ட கவித் திறன். ●

— வளரும்.

### இந்திய - உருசிய நட்புக்கு ஏது உலக சமாதானமே

பஞ்சாப் தேசாதிபதி அளித்த விருந்துபசாரத்திலே உருசிய பொதுவுடைமைக் கட்சிக் காரியதரிசி ஸ்ரீ குருஷேவ் பேசும்போது இந்தியாவுடன் உருசியா நட்புரிமை பாராட்டுவதுபற்றி மேற்கு நாடுகள் சந்தேகப்படுகின்றன. வேறு வேறு வழிகளில் வாழ்க்கை நடத்தும் எங்களுக்கிடையில் இத்தகைய நட்புரிமைக்கு என்ன காரணம் என்று யாரும் கேட்கலாம். யுத்தத்தை நீக்கி உலகசமாதானத்தை உண்டாக்க வேண்டுமென்னும் எண்ணத்தால் ஏனைய வேறுபாடுகள் மறைந்துவிடுகின்றன. உலக சமாதானத்தை உண்டாக்கும் துறையில் எங்கள் நட்பு அமைந்துள்ளதென்பதால் மகிழ்ச்சியடைகிறோம் என்று கூறினர்.

## சர்வோதயமே சாலச் சிறந்தது

### மாதர் சங்கங்களும் முன்னேற்றக்கழகங்களும் மேற்கொள்ளவேண்டிய முறை

செல்வி த. மாலோகமணி
காவெட்டி கிழக்கு

இன்று பெரும்பான்மையான சமூகங்களில் மாதர் சங்கங்களும் முன்னேற்றக் கழகங்களும் உருப்பெற்று நடைமுறையிலிருந்து வருகின்றன. இச்சங்கங்களில் பெரும்பாலனவை உண்மையான, சீரிய முன்னேற்றத்திற்காக உழைக்கின்றனவா? அல்லது பொருளாதாரத்தை விருத்தி செய்வ ........................................

...................................... தற்குப் பாடுபடுகின்றனவா? சீரிய முற்போக்குகளைச் சமூகத்திடையே விருத்திபண்ண வேண்டுமானால் பொருளாதாரத் தட்டுப்பாட்டை ஒழித்துக் கட்ட வேண்டுமானால குறித்த சங்கங்கள் சர்வோதயக்கொள்கைகளைத் தாங்கள் கைக்கொண்டு நடப்பதுடனமையாது ஏனையோரையும் கடைப்பிடிக்கச் செய்ய வேண்டும். சர்வோதயப் பண்பாடுகள் ஒவ்வொரு சமூக மக்களிடையேயும் அவரவர் இதயத்தில் உருவாகி இரத்தத்தில் கலந்தோடினால்தான் சமூகத்திடையே சமாதானம் உண்டாகும். அதன் பின்புதான் வேறு எக்கொள்கையையும் சமூகமக்களிடையே பரப்புவதற்கும், விருத்தி செய்வதற்கும் முயலவேண்டும். அப்பொழுதுதான் மக்கள் பல துறைகளிலும் முன்னேறுவர்.

ஒவ்வொரு சமுதாயத்தின் சீவநாடிகளாயிருப்போர் பெண்களே. பெண்களினாற்றான் நாட்டின் சுபீட்சம் தங்கியிருக்கின்றது. பொதுவிஷயங்களில்பெண்கட்கு உரிமை கொடாத எந்தநாடும் முன்னேற முடியாது; முன்னேறியதுமில்லை. மாதர் சங்கங்கள் பிறகழகங்கள் மூலம் நாட்டு நலனிற்கு நன்றாக உழைக்கலாம், ஒவ்வொரு கணமும் பாகிபடலாம், பாடுபடவேண்டும். கற்ற ஒவ்வொரு பெண்ணும் இது கடமை என உணரவேண்டும்.

## கண்டியில் திவ்வியசீவனசங்கம்

3-ம் பக்கத்தொடர்ச்சி

பாஷை, பதவி வேற்றுமைகள் சிறிதுமின்றிப் பணி புரிதல்.

பணிகள்:

1 ஆன்ம போதனைகள் புத்தகங்கள், பத்திரிகைகள், துண்டுப் பிரசுரங்கள் மூலம் மக்களிடையே பரப்புதல்.

2 யோக, வேதாந்த, சித்தாந்த வகுப்புக்கள், சத்சம்பாஷணைகள், பிரார்த்தனைக் கூட்டங்கள், சொற்பொழிவுகள் முதலியன நடாத்துதல்.

3 ஆசனம், பிராணயாமம், பந்தம் முத்திரை, கிரியை, ஜபம், தியானம் ஆகிய யோகப் பயிற்சிகளை அளித்தல்.

4 சர்வ சமயங்களிலும் உள்ள புனித நாட்களைக் கொண்டாடுதல்.

5 மக்கள் தம் அன்றாட வாழ்க்கையிலிருந்து வருடத்தில் சில தினங்களுக்காவது அடியோடு விலகி பூரண ஆத்மசாதனைகளில் ஈடுபடும் பொருட்டு அவ்வப்போது சாதன தினங்களை ஏற்பாடு செய்து நடத்துதல்.

6 நோயாளிகளுக்கு யோக சிகிச்சை யளித்தல்.

7 வாசிகசாலை.

8 நூல் நிலையம்.

9 அனாதைச் சிறுவர்களுக்கான இல்லம்.

10 இன்னும் சமய வளர்ச்சிக்கேற்ற பலவும் புரிதல்.

### மொழிபற்றி அமைச்சர் சு. நடேசன்

கொழும்பு விவேகானந்த சபை இராமநாதன்விழாவிலே அமைச்சர் ஸ்ரீ சு. நடேசன் அவர்கள் பேசுயபோது தமிழ் மொழிக்குச் சம அஸ்தஸ்துக் கொடாவிட்டால் நான் ஐக்கிய தேசியக்கட்சியிலிருந்து நீங்குவதோடு அமைச்சர் அவையிலிருந்தும் நீங்கி விடுவேன் என்று கூறினர்.

### திருக்கேதீச்சரத்தில் சோமவாரம்

கார்த்திகை முதற்சோமவாரத் திருவிழா திருக்கேதீச்சரத்தில்சிறப்பாகநடைபெற்றது. யாழ்ப்பாணம் முதலிய பல இடங்களிலிருந்து வந்து அடியார்கள் கூடினார்கள். அன்று பகல் விசேட அபிடேக ஆராதனைகள் நடைபெற்றன. இரவு சிறந்த திருவிழா நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலஞ் சென்ற சங்கரப்பிள்ளை தம்பு கனகரத்தினம்

தெல்லிப்பழைக் கிராமச் சங்கத் தலைவராகவிருந்த தெல்லிப்பழை மேற்கில் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை தம்பு கனகரத்தினத்துக்கு பணம் கொடுக்க வேண்டியவர்களும் அவரிடமிருந்து தங்களுக்கு பணம் வரவேண்டியவர்களும் சகல விபரங்களையும் குறித்து எழுத்துமூலம் கீழ்க்குறிக்கப்படும் விலாசத்துக்கு அறிவிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஷையாரின் கடன்களைத் தீர்ப்பதற்கும் பூதல்வரி முதலிய செலவுகட்குமாக மேற்படியாரின் காணிகள் சிலவற்றை விற்கஉத்தேசித்திருக்கிறேன். காணிவாங்கவிரும்புவோர் காணியின் விபரத்தையும் வாங்க விரும்பும் விலைவிபரத்தையும் குறிப்பிட்டு எழுதவும்.

வாங்க விரும்புவோரின் விண்ணப்பம் எதையும் விலைபோதாதென்றோ அல்லது குறிப்பிடாத வேறு காரணத்துக்காகவோ நிராகரிக்குமுரித்து எனக்குண்டு.

விற்பனவு செய்வதற்கு ஒத்துக்கொண்டாலும் பூதல்வரி கொடுத்து முடியும்வரை எவ்விற்பனவும் நடைபெற மாட்டாது.

கு. வன்னியசிங்கம்
(காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை தம்பு கனகரத்தினத்தின மரணசாதன தத்துவகாரன்)
47, கண்டிவீதி
யாழ்ப்பாணம்.
O 121 2-12

## கோட்டுவிற்பனவு விளம்பரம்

சங்கானை வெற்றிவேலுவிசுவனாதன் தர்போது No. 17 நெல்சன் பிளேஸ் வெள்ளவத்தை
வழக்காளி.

இல. 11571.

எதிராக

(1) மாட்டின் கைம்பெண் கெலன் சின்னம்மா No. 32 கச்சேரி ரோட் சுண்டிக்குளி.

(2) யாழ்ப்பாணம் வன்னியசேகரம் கருணானாதன் தற்போது No 7 அலெஸ் ஆன்ரு ரெறேஸ் கொழும்பு.

(3) சிதம்பரப்பிள்ளை செல்லையாவும் பெண்

(4) ரோசம்மா, சுண்டிக்குளி C/o. S. C. மகாதேவா பிறக்டர், யாழ்ப்பாணம்.

(5) N. பிலிப்பையாவும் பெண்

(6) மேரி Alias மேரிப்பிள்ளை சுண்டிக்குளி தற்போது No 118 பலெமுள்ளாய் மாத்தறை.
எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 11571 ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1956 ஆம் ஆண்டு தை மீ 5 உ வியாளக்கிழமை பிற்பகல் 4 மணிதொடக்கம அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸதிறிக் சுண்டிக்குளி கோவிற்பற்று சுண்டிக்குளி இறை "புதியன் வடலி" பர நில இல. 9ம் குளி 3¾ யும் கிணறும் வீடுகளும் அதைச சேர்ந்தவைகளும் எல்லைகளுக்கு இராசரெத்தினத்தின் ஆதனம் வடக்கு விஞசித்தம்பி பெண் மேரிப்பிள்ளையின் ஆதனம் மேற்கு ரோட்டு, தெற்கு அளகரெத்தினம் பெண் தெய்வ ராக்கியம் கமலடேவியின் ஆதனம். இதடங்கலும்.

செ. இரத்தினசபாபதி
கொம்மிஷர்
51 4ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம், 28-11-55.
M. 195. 2-12 (ரூ. 20)

## திருக்கேதீச்சரம்

### 3-வது சோமவாரத் திருவிழாவும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்பெருமான் 77வதுகுருபூசைத்தினமும்

கார்த்திகைத் திங்கள் 19-ந் திகதி (5-12-55) திங்கட்கிழமை காலை 7 மணி தொடக்கம் 1 மணி வரை சோமவார அபிடேகமும் மகேஸ்வர பூசையும் திருக்கேதீச்சரத்தில் நடைபெறும்.

அதன்பின் பிற்பகல் 3 மணியளவில் திருஞானசம்பந்தர் மடத்தில் ஆறுமுக நாவலர் பெருமானது 77-வது ஆண்டுக் குருபூசைச் சொற்பொழிவுகள் நடைபெறும். யாழ்ப்பாணம் சைவப்பெரியார் திரு. மு. ஞானப்பிரகாசம் B. A. B. Sc, அமைச்சர் திரு. சு. நடேசபிள்ளை B. A B. L. இன்னும் பல பெருமக்கள் இவ்விழாவிற்குச் சமுகமளிப்பார்கள். இரவு 7 மணிஅளவில் சுவாமி வீதிவலம் வரும். ஆதலால் அன்பர்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர். கடித.

## தபோவனத்தில் யோகப் பயிற்சி

யோகாசனப் பயிற்சி வகுப்பு மார்கழி (டிசம்பர்) மாதம் 3-ந் தேதி தொடக்கம் 15-ந் திகதிவரை யோகிராஜ் சுவாமி சச்சிதானந்தா அவர்கள் ஷை சங்கத்தாரின் தபோவனத்தில் தங்கியிருந்து நடத்துவார்கள். பின்னர் ஒருமாத காலத்திற்குள் இமாலயம் ரிஷிகேசம் சென்று திரும்புவார்கள். ஆனால் யோகாசன வகுப்பு தபோவனத்தில் தொடர்ந்து நடைபெறும்.

கண்டிக் கிளை அங்கத்தவர்களிடையே வரும் பங்குனி (மார்ச்)மாதத்தில் ஒருயோகாசனப் போட்டி நடைபெறும். அப்போட்டியில் முதன்மை அடைவோருக்கு இரு தங்கப் பதக்கங்களும், ஒழுங்காக யோகாசன வகுப்பிற்குச் சமுகமளித்தவருக்கு ஒரு பரிசும் வழங்கப்படும்.

சாதி மத பேதமின்றி எல்லாரையும் அங்கத்தவராகச் சேர்த்துக்கொள்வதுடன் சேர்வுப்பணம் 1 ரூபாவெனவும் மாதாந்த சந்தாப்பணம் 50 சதம் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. -கடித

## அரசியல் அலை

1-ம் பக்கத் தொடர்ச்சி

ஆபத்தை எண்ணுதுவிட்டால் வேறெப் பொழுது தான் உணருதல் முடியும்? தமிழுக்கு இடமில்லையென்று ஐ தே. க. முடிவு செய்தால் விலகிவிடுவோம் என்ற கூட்டத்தில் திரு நடேசனுஞ் சேர்ந்துவிட்ருர் போலும்! டார். இதுவரையும் அந்த முடிவு செய்யப்படவில்லை என்பதுதான் இவர்கள் முடிபு போலும்!

மற்றுமோர் வழி

அதற்கிடையில் பழைய பிரதமர் இன்னுமொரு வழி தேடுகிருர். அமைச்சர் திரு. நடேசனையுஞ் சிங்களமொழிப் பேச்சாளராக்குவதற்கு யோசனைசெய்து போலும் தபால் செய்திப்பகுதி மந்திரியாரை முன்னுள் முதல் மந்திரி கண்டு பேச முடிவு செய்திருக்கின்

## சாந்தையர்மட ஸ்ரீ கற்பக விநாயகராலயக் கூட்டுப்பிரார்த்தனைக்குழு

26-11-55 சனிக்கிழமை மாலை வண் நாவலர் பாடசாலை மண்டபத்தில் திரு. எஸ். கே. பாலசுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் ஷை பிரார்த்தனைக் குழுவினரின் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

பிரார்த்தனைகள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்று வருகின்றன. ஆனல் இதற்கென ஒரு சபையாக்கி மேலும் பல முன்னேற்றங்களை அடையச் செய்ய வேண்டுமென்று திரு. வ. கந்தசாமி அவர்கள் குறிப்பிட்டார்.

குழுவினரின் நோக்கங்கள்:

1 வெள்ளிக் கிழமை தோறும் கூட்டுப் பிரார்த்தனை செய்தல்.
2 சமயதீட்சைசெய்தல்
3 சமய வகுப்பு நடாத்துதல்.
4 சமயப்பிரசங்கம் செய்வித்தல்.

## அணிந்துரை அரங்கம்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒருங்கு எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. இலக்கணமும் இலக்கியமும் இயைந்துள்ள நெறியில் ஒரு பயிற்சி வெளியீடாயமைந்திருப்பது சாலவும் பொருந்தும்.

வட இலங்கைத் தமிழ் நூற்பதிப்பகத்தார் இவ் வெளியீட்டின் உட்பொலிவுக்குத்தகவெளியமைப்பும் அளித்து அணிபெறச்செய்திருக்கின்றனர்.

விலை ரூபா 1-20

### சிங்கள மொழி

சிங்களமே தனி அரசாங்க மொழியாக்கப்படுதல் வேண்டுமென்று வாதாடுவோர் தங்கள் கருத்தை நிறைவேற்றுதற்குக் கையாளும் முறைகளோ பல. அவற்றுள் ஒன்று தமிழ் மக்களின் கையொப்பங்களை வேறு சாட்டுப்போக்குச்சொல்லிவாங்குவதாம்.

## மொழிச் சமாதானம்

மொழிச் சிக்கலைச் சமாதானமாகத் தீர்க்கவேண்டுமென்று ஐக்கிய தேசியக் கட்சி முன்னணி அங்கத்தவர் சிலர் முயற்சிக்கின்றனராம். இத் தொடர்பில் ஸ்ரீ டட்லி சேனநாயக அமைச்சர் ஸ்ரீ சு. நடேசன் அவர்களைச் சந்தித்துப் பேசுவார் என்று அறிய வருகின்றது.

ஸ்ரீ நடேசன் — சேனநாயக சந்திப்பு நிகழ்ந்து நன்மை எதுவும் உண்டாகவில்லை என்று இப்பொழுது செய்திகள் வெளிவருகின்றன.

## தமிழ்—சிங்களம் இரண்டிற்கும் சம அந்தஸ்து வேண்டும்

உயர்தரக்கல்வி ஆராய்ச்சிச்சபையார் சிங்களம் தான் அரசபாஷையாயிருக்கவேண்டுமென்றும், பல சிங்கள மன்றங்கள் சிங்களமே அரசபாஷையாயிருக்கவேண்டுமெனறும், இன்னும் தனிப்பட்ட பல வகுப்புவாதிகள் சிங்களமே அரச பாஷையாயிருக்க வேண்டுமென்றும்முழக்கம் செய்து வருவதால் இக்கூற்றுக்களையெல்லாம் களைந்தெறிந்துவிட்டு, நாட்டின் ஒற்றுமை, பலம், ஐக்கியம் முதலிய மேம்பாடான தேசமுன்னேற்றக் கொள்கையை அநுசரிப்பதற்கு சிங்களத்திற்கும் தமிழுக்கும் சம அந்தஸ்து அளிக்க வேண்டுமென்றும் இதை அரசியல் சட்டத்தில் வகுத்துவைக்கவேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ள வேண்டும் என்றும் தீர்மானம் ஒன்று சென்ற 4-9-55 ல் நடந்த காரைநகர்ச் சைவமகா சபையின் பரிபாலன மன்றக்கூட்டத்தின் ஏகமனதாக நிறைவேறியது.

—கடித

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை

திருவருளை முன்னிட்டு யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையாதரவில் ஆறுமுகநாவலர் குருபூசை மேற்படி சபை நாவலர் மண்டபத்தில் இம் மாதம் ௧௯-ந் திகதி(5-12-55) திங்கட்கிழமை கீழே காணப்படும் கிரமப்படி நடைபெறும்.

நிகழ்ச்சிகள்

முற்பகல் 9 மணி — பிற்பகல் 1 மணி கடவுளாராதனை தமிழ் மறையோதல், நாவலர் சரித்திரம் படித்தல் மாகேசுரபூசை.

இரவு 6½ மணி
சபைத்தலைவர் திரு த. முத்துச்சாமிப்பிள்ளை அவர்கள் தலைமையில் விரிவுரைக்கூட்டம்.

தமிழ்மறையோதல்.
ஸ்ரீமத் தி. கலியாணசுந்தரக்குருக்கள்

நாவலர் வாழ்க்கைசம்பந்தமான பிரசங்கம்
மாணவன் தி. குகராசன்
,, இ. மகேந்திரன்

'நாவலரும் சைவமும்'
தென்மயிலை திரு செ. கோவிந்தசாமி

"நாவலர் காலம்"
வித்துவான் திரு. க. கார்த்திகேசு B.A (Hons)

'நாவலரும் நாமும்"
ஊழியன் திரு. நா. சேனுதிராசா

சைவாபிமானிகள் யாவரும் சமுகமளிப்பார்களாக

சைவபரிபாலனசபை, மு. மயில்வாகனம்
யாழ்ப்பாணம், 1-12-55. சமயப்பிரசார அமைச்சர்.

## நிலைமையை அறியத் தருகின்றது நடேசன் அவர்களின் சொல்

மொழிப் பிணக்கு உச்சநிலையையடைந்ததும் யாவரும் முதன்மந்திரியின் வருகையை எதிர்பார்த்திருந்தனர். வந்தார். வந்ததும் முன்னுக்குச் சென்ருர் அமைச்சர் ஸ்ரீ நடேசன் அவர்கள். அவர் சென்று கேட்டது மொழிபற்றிமாத்திரமல்ல — சிறுபான்மையரின் உரிமைகள் எல்லாவற்றையும் பற்றியாகும். சிறுபான்மையரின் உரிமைகளைப் பாதுகாத்தற்கு இந்திய அரசியல் திட்டத்தில் எவ்வாறு கட்டுப்பாடு அமைக்கப்பட்டிருக்கின்றதோ அவ்வாறு இலங்கை அரசியல் திட்டத்திலும் கட்டுப்பாடு அமைக்க வேண்டுமென்பது அவர் தெளிவாகக் கூறிய கூற்று. ஐக்கியதேசியக் கட்சி அங்கத்தவர்கள் மாத்திரமல்லாமல் சிறுபான்மையர் யாவருமே ஸ்ரீ நடேசன் அவர்களின் கொள்கையை ஆர்வத்துடன் ஆதரிப்பவர்களாவார்களென்பது இப்பொழுது மக்கள் மனங்களில் உண்டாகியிருக்கும் நம்பிக்கை.

மொழிபற்றித் தன் பொறுப்பில் ஒன்றும் சொல்லமுடியாதென்றும் கட்சித் தீர்மானத்தையே தாம் எதிர்பார்த்திருப்பதாகவும் சேர். ஜோன் சொல்லிவிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோட்டு விற்பனவு விளம்பரம்

சாவகச்சேரி டிஸ்திறிக் கோட்டில் மாணசாதனத் தத்துவஇல 35/T
நாவற்குழி நாகர் வேலாயுதம் காலஞ்சென்றவர்
நாவற்குழி நாகர் வேலாயுதம் கைம்பெண் சின்னத்தங்கச்சி
மாணசாதனத் தத்துவகாரி

சாவகச்சேரி டிஸ்திறிக் கோட்டு மாணசாதன வழக்கு 35/T இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கட்டளைப்பிரகாரம் கீழ்க்காணு மாதம் 1955-ம் ஆண்டு மார்கழி மீ 23-ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு அக்காணிக்குள் நின்று என்னுற் பிரசித்த எலத்தில் விற்கப்படும்.

### ஆதனவிடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மாட்சிப் பகுதி நாவற்குழிக் கோவிற்பற்று நாவற்குழியிறை குளக்கரைவளவு நி பா. 8 இதில் நிலப்பரப்பு 3 மூன்றுக் கெல்லைகிழக்கு சின்னையா கைம்பெண் சின்னனுக்குரியவாதனம். வடக்கு ரேட்டு, மேற்கு நாகன் சின்னத்தம்பிக்குரியவாதனம் தெற்கு கார்த்திகேசு சுப்பிரமணியத்துக்குரியவாதனம். இவ்வெல்லைக்குட்சேர்ந்த நிலப்பரபு (3) மூன்றும் கிணறு ஒன்றும் 10 காய்க்கும் தென்னைகளும் அதைச்சேர்ந்தவைகளனைத்தும்,

மு. நா. மார்க்கண்டு
கொம்மிஷனர்

சாவச்சேரி
1955ம் ஆ. மார்கழி மீ 2 உ
M 192 2.12.55 (த|50)

## கோட்டு விறபனவு விளம்பரம்

சாவகச்சேரி றெக்குவெஸ்துக் கோட்டில்
1. நீர்வேலி வேலுப்பிள்ளை கந்தையாவும் பெண்
2. ஷை வள்ளிப்பிள்ளையும் வழக்காளிகள்.

எதிர்

இல 653
1. மட்டுவில் தெற்கு முருகேசு சின்னத்தம்பி கைம்பெண் சின்னப்பிள்ளை
2. நீர்வேலி முருகேசு கனகசபை எதிராளிகள்.

சாவகச்சேரி றெக்குவெஸ்துக் கோட்டில் 653 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கட்டளைப்பிரகாரம் பின் குறிக்கப்படுமாதனம் 1955ம் ஆ. மார்கழி மீ 21 ௳ புதன் காலை 10 மணியளவில் குறித்த காணிக்குள் நின்று என்னுற் பிரசித்த எலத்தில் விற்கப்படும்

தீர்வைத்தொகை:- ரூபா 226/ம் 15-1-55 தொடக்கம் 14-6-55 ம் திகதி வரைக்கும் ரூபா 200/க்கு 12 வீத வட்டியும் கூடிவரும் தொகைக்கு 15-6-55 தொடக்கம் இறுக்கும்வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 40/=

### ஆதனவிடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மாட்சிப் பகுதி சாவகச்சேரிக்கோவிற்பற்று மட்டுவில் தெற்கிறை ஒறிச்சினன் கலட்டி வளவு நி. பா 49. குளி 11. எல்லை கிழக்கு மயில்வாகனம் பெண் இராசமணிக்குரியவாதனம் வடக்கு ரேட்டு மேற்கு ஆறுமுகம் கைம் பெண் சின்னச்சிக்குரியவாதனம். தெற்கு கத்தோலிக்க மிஷனுக்குரியவாதனம். இதடங்கலிற் சொரியலாய் அரைவாசி.

மு. நா. மார்க்கண்டு
கொம்மிஷனர்,

சாவகச்சேரி,
1955ஆ. மார்கழி மீ 2 உ
M. 193, 2-12-55. (த 50)

## Commission Sale

## விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறைடிஸ்திறிக்கோட்டு வழக்கு இல. 4870

வழக்காளி — பருத்தித்துறை, குமாரசாமி நாகலிங்கம்

எதிரிகள் — 1. பருத்தித்துறை இராமலிங்கம் சிவசுந்தரமும்
2. பருத்தித்துறை பெண் வனசாட்சியம்மாவும
3. ,, முருகேசு வேலுப்பிள்ளை மகன் சிறீதேவியும்
4. ,, C. இராமலிஙகமும்
5. ,, பெண் கமலாதேவியும்

மேற் குறித்த வழக்கில் தீர்ந்த தீர்வையின்படியும் குறித்த கோட்டார் எனக்கனுப்பிய கொம்மிஷன் அதிகாரப்படியும் இதன்கீழ்காணும் ஆதனம் 1956ம் ஆ. தை மீ 9ந் திகதி (9-1-56) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கமாக குறித்த ஆதனமிடமாகவிருந்து என்னுல் பிரசித்த எலத்தில் விற்கப்படும்.

### ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம், டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி பருத்தித்துறைக் கோவிற்பற்று சங்கணம்பற்றை நிலப்பரப்பு 7 குளி 9 17/48. ஆனல் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டு 11776ம் இலக்கப் பிரிவிடல் வழக்கின்படி நிலப்பரப்பு 7 குளி 12. இதில வடக்குப் புறமாக நிலப்பரப்பு 2 உம், 1942ஆ. மார்கழி மீ 24ந் திகதி உலாந்தா மேஸ்தர் திரு. T சுப்பிரமணியம் அவர்களால் 747ம் இலக்கத்தில் விந்தாரிக்கப்பட்ட படத்தின படி நிலப்பரப்பு 5 குளி $10\frac{1}{2}$ யாகக் காட்டப்பட்டிருக்கும் மிகுதி நிலப்பரப்பு 5 குளி 12 இல் குறித்த படத்தின் முதலாம் இலக்கக் கண்டமாகிய நிலப்பரப்பு 1 குளி $7\frac{1}{8}$ உம் சேர்ந்த ஒரு துண்டுக் காணிக்கு நிலப்பரப்பு 3 குளி 7.1/3 தென்னைகள், புளியமரம், கிணற்றுடன் எல்லை கிழக்கு - ரேட்டு, வடக்கு சின்னத்தம்பி கணபதிப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரியஆதனம். மேற்கு - ஒழுங்கை, தெற்கு அம்பலவாணர் நடராசாவுக்கும் மறுபேருககுமுரியவாதனம. இவ்வெல்லைகளுட்பட்டவை யடங்கலும குறித்த 747ம் இலககப்படத்தின் 2ம இலக்கத் துண்டின் மேற்கெல்லையிலிருக்கும் கிணற்றின் பங்கும்.

குறிப்பு :- தாட்சித் திகதிவரை முதலும் வட்டியும் ரூ 4275-00
19-7-54 தொடக்கம
2-12-54வரை 6 வீதவட்டி 71-21
3.12-54 தொடக்கம்
17-11-55வரை5வீத வட்டி 172 04
———
4518-25

வி. முதலியார் குழந்தைவேலு,
கொமமிஷனர்,
பருத்தித்துறை, 19-11 55.
M. 191 2—12

## இலங்கைக்கு வருவாரா

1-ம் பக்கத்தொடர்ச்சி

மக்களது அதிட்டத்தையும் கடவுள் அருளையும் பொறுத்துப் பலன் ஏற்படுமெனவும் விநோபாஜி தமிழ் நாட்டுக்கு வருமபோது இலங்கையி லிருந்து அவரைத் தரிசிக்கச் செல்லும் அன்பர்களுக்கு விசேட தரிசனம் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருவதாயும் அவ்விதம் விரும்பும் அன்பர்கள் தமக்கு அறிவித்தால் வசதியாகும் எனவும் அகில இலங்கைக் காந்திய சேவா சங்கப் பொதுக் காரியதரிசி திரு. சி. க. வேலாயுதபிள்ளை அவர்கள் தெரிவிக்கின்றுர்கள்.

## புங்குடுதீவில் கந்தசஷ்டி விழா

புங்குடுதீவு ஸ்ரீ வரசித்திவிநாயகர் கோயிலில் கந்தசஷ்டி விரதம் நன்கு நடைபெற்றது. ஆறுநாளும் ஸ்கபநாபிஷேகம், சண்முக அர்ச்சனை இருவுலாக் காட்சிகள் நடந்தன. மாலையில் தமிழ்ப்புலவர் பிரம்மஸ்ரீ வ மு இரத்தினேசுவர ஐயர் அவர்களால் சூரபன்மன் வதைப்பகுதியும் தேவயானை திருமணப் படலமும் படித்து விரிவுரையும் ஆலய தரிசனப் பேறும் விளக்கமாகக் கூறப் பெற்றன. — கடித

## அற நிலையப் பாதுகாப்புச் சட்டம்

சைவத் தமிழர்களே! இன்று எங்கள் இலங்காதேவி சீர்குலைந்து விட்டாள். பண்டொருநாள் தேவர்கள் பாதுகாத்தார்கள்; பின் இராவணன் தவவலிமையினுற் பாதுகாத்தான். மேல்நாட்டு மன்னர்களும ஆட்சி புரிந்தனர்.

சே கோ.

இப்போது இலங்கை சுதந்திரமடைந்ததும் சின்னபின்னமாக்கப்பட்டுள்ளது. அரசு நிலை தவறிவிட்டது. பலபிரச்சினைகள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த தருணத்திற்ருன அறநிலையப்பாதுகாப்புச் சட்டம் ஏற்படுத்துவது? அரசியல் நிலைமையைச் சீர்ப்படுத்திக்கொண்டு அதன்பின் எந்தச் சட்டத்தையும் பேசித் தீர்மானித்துக் கொள்ளலாம். இதனை ஒவ்வொரு தமிழனும் உணர்தல் வேண்டும்.

# உங்கள் நக்ஷத்திரம்?

எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

### இருவாரப் பலன்கள், 4—12—55 —— 10—12—55

**மேடராசி அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.**

உம்முடைய உத்தியோக கருமங்களில் இந்தவாரம் நீர் சில கண்டனங்களை முன்னிடவேண்டி வரக்கூடும். சில பகுதிகளிலிருந்து நம்பிக்கைமோசம் உண்டாவதற்கும் இடமுண்டு. வார இறுதியில் தனலாபம் நிச்சயம்.

**இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.**

உம்முடைய நடைமுறை அலுவல்களில் இந்தவாரம் சில மாற்றங்களுக்கிடமுண்டு. குடும்பச் சூழலில் நீர் சில குழப்பங்களை முன்னிடவேண்டிவரும். மனச்சமாதானம் உமக்குச் சிறிதுமிருக்கமாட்டாது.

**மிதுனராசி மிருகசீரிடம், 3,4 திருவாதிரை, புனர்பூசம் 1,2,3**

இந்தவாரம் உம்மோடு போட்டியிடுவோரை அதிகம் வருத்தமில்லாது நீர் வெல்லக்கூடியதாயிருக்கும். தனலாபமும் புகழும் நிச்சயம். ஆனல் குடும்பச்சூழலில் எல்லாம் நல்லாயில்லை.

**கடகராசி புனர்பூசம் 4ம்பாதம் பூசம் ஆயிலியம்,**

பணத் துறையில் நல்ல வாரம். ஆனல் சுகவீனங்களுக் கிடமுண்டு வயிற்றுக் குழப்பங்களுக்கிடமுண்டு வார இறுதியில் உம்முடைய முயற்சிகள் பலவற்றில் சகோதர சகோதரிகள் அதிக உதவியாயிருப்பர்.

**சிங்கராசி மகம், பூரம், உத்திரம், 1ம் பாதம்.**

வாகனங்கள் உமக்கு அதிக செலவையுண்டாக்கும். உம்முடைய நெருங்கிய இனத்தவர் சிலருடன் நீர் கோபிக்கவேண்டி வரும். வழக்கத்திலும வேலை கூடவாயிருக்கும். மற்றவர்களை அதிகம் நம்பவேண்டாம்.

**கன்னிராசி உத்திரம் 2,3,4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.**

உத்தியோக காரியங்களுக்கு நல்ல வாரம், குடும்பச் சூழலில் சில பிழை எண்ணங்களுக்கிடமுண்டு. சகோதர சகோதரிகள் அதிக உதவியாயிருப்பர், கமத்தொழில்துறையில் சித்திக்கு இடமுண்டு.

**துலாம்சித்திரை 3,4ம் பாதம். சுவாதி விசாகம் 1,2,3ம் பாதம்**

பொதுவாக நல்லவாரம். ஆனல் மற்றவர்களோடு சண்டை தொடுக்கவும் பிழையாய் விளங்கவும் நீர் விரைவீர் உம்முடைய நண்பர் அதிக உதவியாயிருப்பர். வாரஇறுதியில் தனலாபம் நிச்சயம்.

**விருட்சிகராசி விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.**

குடும்பச்சூழலில் எல்லாம் நல்லாயில்லை, தொந்தரவுகளுக்கும் பிழை எண்ணங்களுக்குமிடமுண்டு. உமமுடைய தேகசுகமும நல்லாயிருக்கமாட்டாது, பணத் துறையிலும கடினமான காலம். வீண் செலவு சமாளிப்பதில் வருத்தப்படுவீர்.

**தனுராசி மூலம் பூராடம் உத்தராடம் 1 பாதம்**

பொதுவாகச் சித்தியான வாரம் ஆனல் முதல் இரண்டுநாள்களும் கவனமாய்க்கழிக்கவேணடும், மிகுதி வாரத்தில் சமூக சித்தியும் புகழும் நிச்சயம். உம்முடைய முயற்சிகளை முன்னேற்றுக.

**மகரராசி உத்தராடம் 2,3,4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.**

இந்தவாரம் புதுமுயற்சிகளில் சித்தி நிச்சயம், ஆனல் முன்னேற்றம்.மெதுவாகவே வரும். திங்கள் செவ்வாயும் புதன் காலையும் உம்மைச் சிறிது குழப்பக்கூடும். வார மிகுதி திரும்பவும் நன்ருகின்றது.

**கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ம் பாதம்.**

குடும்பச்சூழலில் சில பிழைஎண்ணங்களுக்கு இந்த வாரம் இடமுண்டு. ஆனல் உத்தியோகத் துறையில் நல்லவாரம். புகழும் சித்தியும் நிச்சயம். புதன் பிற்பகல் வியாழன் வெள்ளி கவனமாய்க் கழிக்கவும்.

**மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.**

குடும்பச்சூழலில் சுகவீனத்துக் கிடமுண்டு. பிதாவழி இனத்தவர் உம்முடன் சண்டை தொடுக்கப்பார்கள். பண நெருக்கடிக்குமிடமுண்டு. உமக்குக் கடன் உண்டாகக்கூடும்.


# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ. ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர்மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
616313,00
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து எற்படும வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும், தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாகோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும், முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்,
இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14 20-11-46—20-11-49.


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

Printed and Published by S. P. Kandiah, F. I. S A. (Lond.) residing at 245, Navalar Road Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai Jaffna on Friday Dec, 2, 1955.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org